## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## ஆத்தூர்
------

**அசல் வழக்கு எண்.**15/2024

**2026 ஆம்** வருடம் ஜுலை மாதம் 08 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமு | ஜாதி | : | |
| த.பெ | : | பெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2026 |
| தேதி | : | 08.07.2026 | | | |

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தை நீங்கள் கிரையம் வாங்கும்போதோ, உங்கள் தாயார் கிரையம் வாங்கும்போதோ உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 590/2 என்பது 590/2A முதல் 590/2E வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல உட்பிரிவு செய்யப்படவில்லை. நீங்கள் தாக்கல் செய்த பிராதில் 590/2A, 590/2D என்று குறிப்பிட்டு தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கிரையம் பெற்றபிறகு உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றும், UDR ல் உட்பிரிவு தவறாக செய்யப்பட்டுள்ளது என்று சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் 1991 ல் கிரையம் பெற்ற 30 சென்டிற்கு உங்களது பெயரில் சர்வே எண். 590/2B ஆக உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா எண். 2667 ற்குரிய பட்டா வந்துள்ளதா என்றால் பாதி வந்துள்ளது. நீங்கள் கிரையம் பெற்ற 30 சென்டிற்கு 33 1/4 சென்ட் சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 17 சென்ட்டிற்கு வழக்கு நடப்பதால் பட்டா கொடுக்கவில்லை. சர்வே எண். 590/2E ல் வாதியும் அவரது சகோதரரும் வாய் மொழியாக பிரித்து கொண்டு அனுபவித்து

வருகிறீர்கள் என்றால் சரிதான், ஆனால் இன்னும் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை.

சர்வே எண்.590/2E ல் 81 1/2 செண்ட் நிலத்தை நீங்களும், உங்கள் சகேதாரர் பாண்டியும் அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. 30 செண்ட்டை தான் அனுபவித்து வருகிறோம். அந்த இடம் உங்கள் தகப்பனார் பெருமாள்கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவர் பெயரில் தான் பட்டா உள்ளது. உங்களிடம் காட்டப்படும் பட்டா எண்.618 ல் உள்ள பெருமாள்கவுண்டர் பெயரில் சர்வே எண்.590/2E ல் 33 ஏர்ஸ் உங்கள் தகப்பனார் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா எண்.618 **(பி.வா.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த 33 ஏர்ஸ் நிலம் உங்கள் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய அனுபவத்திலும், என் அண்ணன் அனுபவத்திலும் உள்ளது.

உங்கள் பெயரில் உள்ள பட்டாவையோ, உங்கள் அப்பா பெயரில் உள்ள பட்டாவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உங்கள் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்வதாக கூறவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 1982 ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியான அவரது சகோதரருக்கு 1986 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அரசு பணியில் உள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அரசு பணியில் இருப்பதால், 3ம் பிரதிவாதி செல்வராஜ் தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் செல்வராஜ் உழவடை செய்து வந்ததால் 3ம் பிரதிவாதி பெயரில் முதலில் தாவா சொத்திற்கு பட்டா வந்தது என்றால் சரிதான்.

பின்னிட்டு எந்த பிரச்சனையும் வரக்கூடாது என்பதற்காக 3ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியிடம் இருந்து 24.11.2008 ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். சர்வே எண்.590/1 க்கு வடக்குபுறம் குளம் உள்ளது என்றால் சரிதான். சர்வே

எண்.590/1 க்கு வடக்குபுறம் குளம் உள்ளதால் தான் தாவா சொத்து குளத்திற்கும் மேற்கில் உள்ளதால், அந்த குளத்தில் உள்ள தண்ணீரால் அழிமானம் ஏற்பட்டு வருவதால் கூடுதலாக முன்பாகஸ்தர் மூலமாக 30 செண்ட் நிலத்தை அனுபவம் உரிமையில் விட்டுக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு தாவா சொத்து கிரையத்தின் மூலம் தான் பாத்தியம் என்றும், உங்களுக்கு முன் கிரையம் பெற்றவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் உட்பிரிவு தவறாக உள்ளது என்று நீங்கள் கூறினால் நீதிமன்ற ஆணையர் நியமனம் மூலம் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்கள் நிலத்திற்கு வடக்கு பக்கம் தான் 3ம் பிரதிவாதி நிலம் உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி நிலம் பள்ளத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அது சமமாக தான் உள்ளது.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor